### த.வெ.க. காவல்துறையினரின் அராஜகம்!

# நீதி கேட்டு சென்ற பெண்களை வலுகட்டாயமாக தூக்கிச் சென்றனர்!

## அரியலூரில் போலீசார் அராஜகம் – பெண்கள் கண்ணீர்!

அரியலூர்,அக்.7- அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டாட்சியர் அலுவலகம் அருகே, சுப்பிர மணியன் என்பவர் புதிதாக கட்டிவரும் வீட்டில் செப் டிக் டேங்க் அமைக்கப் பட்டு வருகிறது.

அந்த செப்டிக் டேங்க் கட்டுமான சென்ட்ரிங் பலகை அகற்றும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்க ளான திருவாரூர் மாவட் டத்தைச் சேர்ந்த பாஸ்க ரன், தினகரன் மற்றும் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ராமச்சந்திரன் ஆகிய மூவரும் கடந்த அக் டோபர் 2ம் தேதி மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயக்கமடைந்த நிலையில், தீயணைப்புத் துறையினர் மீட்டு 108 வாகன மூலம் செந்துறை அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைக் கப்பட்டனர்.

அங்கு பரிசோதித்த மருத் துவர்கள் தொழிலாளர்கள் மூவரும் ஏற்கனவே உயிரி ழந்ததாக தெரிவித்தனர். உயிரிழந்த தொழிலாளர்க ளின் உடல் பிரேத பரிசோ தனைக்காக, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண் டுவரப்பட்டு நேற்று முன்தினம் பிரேத பரிசோ தனை செய்யப்பட்டது.

இந்த நிலையில் பிரேத பரிசோதனை முடிந்தும் உடலை வாங்க மறுத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் மற்றும் தொழி லாளர்களின் குடும்பத்தினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உயிரிழந்த தொழிலாளர் களின் குடும்பத்திற்கு மனித கழிவுகளை மனிதனே அகற்ற தடை என்ற சட்டத் தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, ரூ.30 லட்சம் இழப் பீடு மற்றும் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும் பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்து பேச்சுவார்த்தையில் ஈடு பட்டனர்.

பேச்சுவார்த்தை 3 நாட் களாக நீடிக்கும் நிலையில் உரியதீர்வு கிடைக்காததால், நேற்று முன்தினம் மாவட்ட சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியி னர் மற்றும் உயிரிழந்தவர் களின் குடும்பத்தினர் உடலை வாங்க மறுத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று அரியலூர் மாவட்ட ஆட்சி யர் அலுவலகத்தில் காத்தி ருப்பு போராட்டத்திற்கு வந்த கம்யூனிஸ்ட் கட்சியி னர் காவல் துறையை தடுத் தவையும் மீறி ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள நுழைந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இ த னை ய டு த் து போராட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் உயிரி ழந்த தொழிளார்களின் குடும்பத்தினர் மற்றும் பெண்களை கை, கால்களை பிடித்து ஆடு மாடுகளை தூக்கி செல்வதுபோல் தூக்கி சென்றனர், காவல் துறையினர் வலுக்கட்டாய மாக கைது செய்து காவல் துறை வாகனத்தில் ஏற்றி சென்றதால் பெரும் பர பரப்பு ஏற்பட்டது.

த.வெ.க. அரசின் அலட் சிய போக்கை அக் குடும்பத் தினர் கண்டித்தனர்,இதற் காகவா உங்களுக்கு வாக்களித்தோம் என அழுதபடியே சென்றனர்.

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்யா; ஏ.சி. கேரவான்ல பிரச்சாரம் செய்த முதலமைச்சர் விஜய், கடைசியிலே மாட்டுவண்டியிலே பிரச்சாரம் பண்ற நிலைக்கு வந்துட்டாரே பார்த்தியா? என்னா நடிப்பு!

**போண்டி :** **ஆமாய்யா! பார்த்தேன். நடிப்பு ஒரு பக்கம் இருந்தாலும் த.வெ.க. ஆட்சியின் லட்சணம் அந்த நிலைக்கு அவரைக் கொண்டு வந்துடிச்சிங்கறதுதானே உண்மை.**

### தேர்தலுக்காக மட்டும் மக்களைச் சந்திக்கும் கட்சியல்ல!

# சாமானிய மக்களுக்காகத் தொடங்கப்பட்ட இயக்கம் தி.மு.க.!

## காட்பாடியில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் பேட்டி!

**காட்பாடி, அக். 7- பள்ளியில் காலை உணவு, தங்க மோதிர திட்டம், மகளிர் பய ணத்திட்டம் ஆகியவை தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் என தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் தெரி வித்துள்ளார்.**

காட்பாடியில் செய்தியாளர்களி டம் பேசிய தி.மு.க. பொதுச்செய லாளர் துரைமுருகன், தி.மு.க. சாமானிய மக்களுக்காக தொடங்கப்பட்ட கட்சி என தெரி வித்தார். தேர்தலுக்காக மட்டும் மக்களை சந்திக்கும் கட்சி தி.மு.க. கிடையாது என்றும், தி.மு.க.வினர் பார்க்காத குக்கிரா மங்களோ, போகாத இடமோ, சந்திக்காத மக்களோ இல்லை என்றும் அவர் தெரிவித்தார். அதேபோன்று, நாங்கள் பார்க் காத வெற்றியோ, தோல்வியோ இல்லை என்றும் அவர் குறிப் பிட்டார். பள்ளிகளில் காலை உணவு, தங்க மோதிரம், மக ளிர் பயணம் உள்ளிட்ட திட்டங் கள் தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்டவை என்றும் அவர் கூறினார்.



**இடைத் தேர்தலுக்காக தெருத் தெருவாக அலையும் விஜய்!**

கொளத்தூரில் 5 நிமிடம் பேசி னதுக்கே கொத்து பரோட்டா போட்டதாக சொன்ன முதல மைச்சர் விஜய், இப்போது, மது ராந்தகம், தாராபுரம் தொகுதிக ளில் பல மணிநேரம் பிரசாரம் செய்ததாக அவர் குறிப்பிட்டார். இடைத்தேர்தல் பிரசாரத்திற்காக, எந்த முதலமைச்சரும் இப்படி தெருத் தெருவாக, வீதி வீதியாக அலைந்தது கிடையாது என்றும் திமுக பொதுச்செயலாளர் துரை முருகன் கூறினார். முதலமைச் சர் விஜய் தன்னைத் தானே, அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜெயல லிதாவுடன் ஒப்பிட்டுக்கொள்வ தாகவும் விமர்சித்தார்.

**த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் இந்தி திணிப்பு!**


தி.மு.க. ஆட்சியில், தேசிய நெடுஞ்சாலையில் இருந்த விளம்பர பலகைகளில் இந்தி தவிர்க்கப்பட்டிருந்ததாகவும், தற்போது, த.வெ.க. ஆட்சியில் அந்த மொழி மீண்டும் வருவதா கவும் கூறினார். தமிழ், ஆங்கி லம் என்று இருந்த விளம்பரப் பலகைகளில் தற்போது, இந்தி யும் சேர்க்கப்பட்டிருப்பதாக குற் றம்சாட்டினார். இதற்கு தமிழக அரசு எந்த விளக்கமும் அளிக்க வில்லை என்றும் துரைமுருகன் குற்றம்சாட்டினார்.

### அணையா விளக்காய்

# மக்கள் மனதில் வாழ்பவர் வள்ளலார்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!

**சென்னை, அக். 7- தீராவிட மாடல் அரசு வள் ளலார் புகழைப் போற்றியது என்றும், அணையா விளக் காய் மக்கள் மனதில் வாழ்ப வர் வள்ளலார் என்றும்; அவர் புகழ் ஓங்கட்டும் என் றும் குறிப்பிட்டு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப்பதிவில் பதிவிட்டுள்ளார்.**



வள்ளலார் பிறந்த நாளை யொட்டி எதிர்க்கட்சித் தலை வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள ளப்பதிவு வருமாறு :-

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று பாடிய வள்ளலார் இரா மலிங்க அடிகளார் பிறந்த நாள் இன்று. தனிப்பெருங்க ருணை நாள்

சாதி மதம் சாத்திரம் என் பதை மறுத்து மானுடத்தை முன்வைத்த புரட்சியாளர் வள்ளலார்.

ஏற்றத்தாழ்வுக்கு எதிரான அறிவுத்தீயோடு பசிப்பிணி போக்குவதற்கான பெரு நெருப்பையும் ஏற்றியவர்.

வள்ளலார் பிறந்த நாளை த னி ப் பெ ரு ங் க ரு ணை நாளாக அறிவித்தது. அனைத்துலக வள்ளலார் மாநாடு, வள்ளலார் முப்பெ ரும் விழா, வள்ளலார் இல் லம் புனரமைப்பு, திரு வொற்றியூர் நெடுஞ்சா லைக்கு வள்ளலார் பெய ரைச் சூட்டியது என கழகத்த லைவர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு வள்ளலார் புக ழைப் போற்றியது.

அணையா ஒளியாய் மக் கள் மனதில் வாழும் வள்ள லார் புகழ் ஓங்கட்டும்!

இவ்வாறு அவர் பதிவிட் டுள்ளார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## நீலநாராயணன்

**அக்டோபர் 7 (1996)**



எல்லோராலும் 'நீலம்' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்.

கழக அமைப்புச் செயலாளராகவும் சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இரு முறையும் பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் 'பெரியார் விருது' பெற்றவர்.

கழகம் அறிவித்த பல போராட்டங்களில் சிறை சென்றதோடு மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### விடுமுறை முடிந்து சென்னை திரும்பிய மக்கள்!

# சென்னை புறநகர்ப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல்!

## முக்கியச் சாலைகளில் வாகனங்கள் அணிவகுப்பு!

சென்னை, அக். 7- மூன்று நாட்கள் தொடர் விடுமுறை முடிந்து, சென்னை திரும்பும் மக்களால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பள்ளி காலாண்டு தேர்வு, காந்தி ஜெயந்தி மற்றும் தொடர் விடுமு றையை முன்னிட்டு சென்னையில் இருந்து ஏராளமானோர் தென் மாவட்டங்கள் உள்பட சொந்த ஊர்களுக்கும், சுற்றுலா இடங்களுக் கும் சென்றிருந்தனர். விடுமுறை முடி வடைந்து பள்ளிகள், கல் லூரிகள் திறப்பு மற்றும் பணிக்கு திரும்ப வேண் டியுள்ளதால் நேற்று முன்தினம் மாலை முதல் சென்னை நோக்கி படையெடுக்க தொடங் கினர்.

இதனால் திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வாகன போக்குவரத்து அதிகரித்து, பல இடங்க ளில் வாகனங்கள் ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டது. குறிப்பாக உளுந்தூர்பேட்டை சுங் கச்சாவடி அருகே 2 கி.மீ. தொலைவுக்கு வாகனங் கள் அணிவகுத்து சென்றது.

முன்னதாக, விடு முறை தொடங்கிய போது சென்னையில் இருந்து சொந்த ஊர்க ளுக்குச் சென்றவர்க ளால் தாம்பரம், பெருங் களத்தூர் மற்றும் ஜிஎஸ்டி சாலையில் கடும் நெரிசல் ஏற்பட்டி ருந்தது.

தற்போது விடுமுறை முடிந்து அதே அளவுக்கு மக்கள் சென்னை திரும் புவதால் மீண்டும் போக் குவரத்து நெரிசல் ஏற் பட்டுள்ளது. சொந்த வ ா க ன ங் க ளி ல் சென்னை திரும்புவோர் மட்டுமின்றி அரசு மற் றும் தனியார் பேருந்து கள், ரயில்களிலும் பய ணிகள் கூட்டம் அதிகரித்தது.

இதன் காரணமாக சென்னை புறநகர் பகுதி களிலும், நகருக்குள் நுழையும் முக்கிய சாலைகளிலும் இரவு நேரத்திலும் கடும் போக் குவரத்து நெரிசல் நீடித்தது.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இரா. துரைராஜன்

**அக்டோபர் 7 (2017)**



நாகப்பட்டினம் மாவட்டத்தில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

1966ல் வட்டத் தலைவராகவும் – 1972 முதல் 1995 ஆம் ஆண்டு வரையிலான 23 ஆண்டுகள் தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வீடுகட்டும் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வார்டு கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**